கொடைக்கானலில் அரசு நிலத்தை அபகரித்த முதலமைச்சர் விஜய்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு:

சென்னை, அக்.8 -

கொடைக்கானலில் அரசு நிலத்தை முதலமைச்சர் விஜய் அபகரித்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்துள்ள வேட்பு மனு மற்றும் சொத்து விவர படிவத்தில் முரண்பாடுகள் இருப்பதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சென்னை பாடியில் 35 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு சொத்தை, இன்னும் தமக்குச் சொந்தமான 7 கோடி மதிப்புள்ள சொத்து என தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொடைக்கானல் வில்பட்டி கிராமத்தில் 50 சென்ட் விவசாய நிலங்கள் இருப்பதாக, தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் குறிப்பிட்ட நிலம், அரசுக்கு சொந்தமானது என மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல அசையாச் சொத்துக்கள் குறித்துத் தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாகவும், தவறாக குறிப்பிடப் பட்டுள்ளதாகவும், இதனால் சென்னை பெரம்பூர் தொகுதியில்முதலமைச்சர் விஜய் பெற்ற வெற்றியை செல்லாது என அறிவிக்க மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி, அதே தொகுதியைச் சேர்ந்த எஸ்.தினேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தேர்தல் வேட்புமனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் (Form 26), முதல்வர் விஜய் தனது அசையா சொத்துக்கள் குறித்த விவரங்களை முழுமையாகவும் சரியாகவும் தெரிவிக்கவில்லை. தகவல்களை மறைத்துள்ளார் என்பதே மனுதாரரின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

சென்னை போரூரில் ரூ.9.13 கோடிக்கு 33,955 சதுர அடி விவசாயம் அல்லாத நிலத்தை 2010ல் வாங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பதிவுத்துறை ஆவணங்களின்படி, அவர் ரூ.7.5 கோடிக்கு 20,773 சதுர அடி நிலத்தை மட்டுமே வாங்கியுள்ளார். நிலத்தின் பரப்பளவு மற்றும் விலையில் ஏன் இந்த கூடுதல் தகவல் குறிப்பிடப்பட்டது என்பதற்கு விளக்கம் இல்லை என்று குற்றம் சாட்டப் பட்டது.

ஆனால், அந்த 23,460 சதுர அடி வணிகக் கட்டடத்தை வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்பே, 2026 பிப்ரவரி 12 அன்றே ரூ.35 கோடிக்கு விற்று விட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இக்கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கொரட்டூர் நிலத்திற்குப் பதிலாக பரிமாற்றப் பத்திரம் மூலம் பெறப்பட்டது. இது நேரடி கொள்முதல் அல்ல என்ற விவரமும் மறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

நீலாங்கரை பங்களாவை பரம்பரைச் சொத்து எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அது பரம்பரைச் சொத்து அல்ல; அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் 2003ல் வேறொருவரிடம் இருந்து வாங்கி, 2005ல் தனது மகனுக்கு அன்பளிப்பாக (Settlement Deed) எழுதிக் கொடுத்த சொத்து. இதில் கட்டடப் பரப்பளவு மற்றும் சந்தை மதிப்பில் முரண்பாடுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தி.மு.க. முன்னாள் அமைச்சர்

எஸ்.ரகுபதியின் வெற்றிக்கு எதிரான தேர்தல் வழக்கு!

உச்சநீதிமன்றம் தள்ளுபடி!

புதுடெல்லி, அக். 9 -

தி.மு.க. முன்னாள் அமைச்சர் ரகுபதி வெற்றிக்கு எதிரான வழக்கை சுப்ரீம்கோர்ட்டு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக ரகுபதியின் மனுவை ஏற்று த.வெ.க. வேட்பாளரின் தேர்தல் வழக்கை சென்னை ஐகோர்ட் நிராகரித்து உத்தரவிட்டிருந்தது.

திருமயம் தொகுதி

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ரகுபதி 1,492 வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

த.வெ.க. மனு

அவரது வெற்றியை எதிர்த்து தவெக வேட்பாளர் சிந்தாமணி, சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி தி.மு.க. எம்.எல்.ஏ. ரகுபதி மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், ரகுபதியின் மனுவை ஏற்று த.வெ.க. வேட்பாளர் சிந்தாமணியின் தேர்தல் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டார்.

மனு தள்ளுபடி

இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப் பட்டது. இந்நிலையில் மேல்முறை



யீட்டு மனுவை நீதிபதிகள் பிரசாந்த்குமார் மற்றும் ஸ்ரீசந்திர சேகர் அடங்கிய அமர்வு விசாரணை செய்தநிலையில், அந்த மனுவை இன்று தள்ளுபடி செய்து உத்தர விட்டது.

கோவை அரசு மருத்துவமனை மாத்திரை கவரில் இந்தி மொழி!

கோவை, அக். 9 -

கோவை அரசு மருத்துவமனையில் வழங்கப் பட்ட மாத்திரை கவரில் தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றுடன் இந்தி மொழியும் இருந்ததாக சர்ச்சை எழுந்துள்ளது.

கோவை அரசு மருத்துவமனைக்கு கோவை மட்டுமின்றி திருப்பூர், ஈரோடு, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த ஏராளமான நோயாளிகள் தினமும் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளி களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, மருத்துவர்களின் பரிந்துரைப்படி பல்வேறு வகையான மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்காக, மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் மாத்திரை கவர்களில் காலை, மதியம், மாலை, இரவு என மாத்திரை பயன்படுத்தும் முறை உள்ளிட்ட விவரங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுவது வழக்கம். இந்நிலையில், சமீபத்தில் கோவை அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட மாத்திரை கவர்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுடன் இந்தி மொழியிலும் வாசகங்கள் இடம்பெற்றிருந்தது.

இதனை கவனித்த நோயாளிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள், தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் வழங்கப்படும்



மாத்திரை கவரில் இந்தி மொழி இடம்பெற்றிருப்பது ஏன்? என கேள்வி எழுப்பினர். மேலும் தமிழகத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் நடைமுறையில் உள்ள நிலையில், மூன்றாவது மொழியாக இந்தி மொழி திணிக்கப்படுவதா கவும் சிலர் குற்றம்சாட்டினர்.

மேலும், கோவை அரசு மருத்துவமனையில் இந்தி மொழியுடன் வழங்கப்பட்ட மாத்திரை கவர்கள், புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த விவகாரம் மருத்துவமனை நிர்வாகத்தின் கவனத்திற்கு சென்ற நிலையில், மருத்துவமனை டீன் உத்தரவின் பேரில் நேற்றிரவு இந்தி மொழி இடம்பெற்றிருந்த மாத்திரை கவர்கள் மாற்றப்பட்டன.

பின்னர், இந்தி மொழி இல்லாத புதிய மாத்திரை கவர்களில் நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டது. இந்த சம்பவம் அரசு மருத்துவமனை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், மாத்திரை கவர்களில் எந்த மொழிகளில் விவரங்கள் இடம்பெற வேண்டும், அவை எந்த அடிப்படையில் அச்சிடப் பட்டன, மருத்துவமனை நிர்வாகத்தின் அனுமதியுடன் தான் இந்த கவர்கள் பயன்படுத்தப்பட்டன வா? என்பது உள்ளிட்ட கேள்விகளும் எழுந்துள்ளன.

மேலும், அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும் பொருட்களில் தமிழகத்தின் மொழிக் கொள்கை மற்றும் நோயாளிகளின் புரிதலுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என வும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், இந்தி இடம் பெற்ற மாத்திரை கவர்கள் எவ்வளவு காலமாக பயன்படுத்தப்பட்டன? அவை எங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்டன? எத்தனை கவர்கள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன? தற்போது அவை முழுமையாக திரும்பப் பெறப்பட்டுள்ளனவா? என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. கோவை அரசு மருத்துவமனைகளில் வட மாநிலத்தை சேர்ந்த பலரும் சிகிச்சை பெற வருவதால் அவர்களுக்கு புரியும் வகையில் இந்தி வாசகம் இடம் பெற்று இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக மருத்துவமனை டீன் தொடர்பு கொண்ட போது அவர் பிறகு பேசுவதாக கூறி, கவர்கள் சர்ச்சை குறித்து பேச மறுத்துவிட்டார்.

இது குறித்து மருத்துவமனையின் ஆர்.எம்.ஓ சரவணபிரியா கூறுகையில், "மாத்திரை கவர் குறித்த சர்ச்சை எழுந்தவுடன் டீன் உத்தரவின் பேரில் மாத்திரை கவர்கள் உடனடியாக மாற்றப்பட்டது. ஆனால், டெண்டர் அடிப்படையில் கவர்கள் சிந்தாமணியிடம் இருந்து தான் பெறப்பட்டு வருகிறது.

இப்போது இந்த சர்ச்சை எழுந்துள்ளது" என்றார்.

தாராபுரத்தில் மாறிய தேர்தல் களம்!

20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வாக்களிக்காதது ஏன்?

ஆலமரத்தடி முதல் டீக்கடை வரை பேசு பொருளாக மாறி உள்ளது!

திருப்பூர், அக். 9 -

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தல் வாக்குப் பதிவில் பொதுத்தேர்தல் வாக்குப்பதிவை விட சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்க வராதது அரசியல் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 6ம் தேதி நிறைவு பெற்றது. கடந்த ஏப்ரல் மே மாதங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தபால் வாக்குகள் தவிர்த்து மொத்தமாக 1,99,944 வாக்குகள் பதிவாகியிருந்தன. ஆனால், தற்போது நடைபெற்ற இடைத் தேர்தலில் மொத்தமுள்ள 2,23,306 வாக்காளர்களில் 1,79,214 நபர்கள் மட்டுமே வாக்களித்துள்ளனர். இதனால், வாக்குப்பதிவு சதவீதம் 80.25 ஆக குறைந்துள்ளது. வெறும் 4 மாத கால இடைவெளியில் சுமார் 20,730 வாக்காளர்கள் வாக்களிக்க ஆர்வம் காட்டாமல் இருந்துள்ளனர். நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்கும், தற்போது நடைபெற்ற இடைத் தேர்தலுக்கும் இடைப்பட்ட 4 மாத கால இடைவெளியில், வாக்காளர்கள் காட்டிய தயக்கமும், ஆர்வம் இன்மையும் அரசியல் கட்சியினர் மத்தியில் மட்டுமல்லாது தேர்தல் பிரிவு அதிகாரிகளிடத்திலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் மே மாதங்களில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் போது வெளிநாடுகள், வெளிமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஆர்வத்துடன் சொந்த ஊருக்கு வந்து வாக்களித்த இளைஞர்கள், இந்த இடைத்தேர்தலில் பக்கத்து தாலுகாவில் இருந்துகூட வந்து வாக்களிக்க ஆர்வம் காட்டவில்லை என கூறப்படுகிறது. வாக்களிக்க வராதவர்களில் 5 சதவீதத்திற்கும் அதிகமானோர் இளைஞர்கள் என கூறப்படுகிறது. அண்டை மாவட்டங்களுக்கு தொழில் நிமித்தமாகவும், கல்வி நிமித்தமாகவும் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் வாக்களிக்க வரவில்லை. ஆளும் அரசின் மீது ஏற்பட்ட நான்கு மாத கால அதிருப்தியா? அல்லது ஏற்கனவே வெற்றி பெற்றவர் ராஜினாமா செய்து மீண்டும் போட்டியிடுவதால் வாக்காளர்களுக்கு ஏற்பட்ட சலிப்பா என்பதே விவாதத்தின் மையகருத்தாக மாறியுள்ளது.

பொதுத்தேர்தலை காட்டிலும் இந்த இடைத் தேர்தல் மாநில அளவில் பெரும் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்தது. பொதுத்தேர்தலின் போது பல மாவட்டங்களுக்கு கூட செல்லாத த.வெ.க. தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய், தாராபுரம் தொகுதிக்கு மட்டும் இருமுறை நேரில் வந்து தீவிர பிரசாரம் மேற்கொண்டார். இதில் 2வது முறை சுமார் 30 கி.மீ திறந்த வாகனத்தில் சென்று மக்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மேலும், 13க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் கடந்த 15 நாட்களாக தாராபுரத்தில் முகாமிட்டு வீதி, வீதியாக பிரசாரத்தில் ஈடுபட்டனர். மறுபுறம், தேர்தல் ஆணையமும், மாவட்ட நிர்வாகமும் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தின. இவ்வளவு உயர் மட்ட பிரசாரங்களும், விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், வாக்கு சதவீதம் குறைந்திருப்பது அனைத்து தரப்பினரிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கணக்கு : தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் வாக்கு சதவீதம் குறைந்தது ஒருபுறம் இருந்தாலும், இது எந்த கட்சிக்கு சாதகமாக அமையும் என்ற கணக்கு கிராமப் புறங்களில் உள்ள ஆலமரத்தடி முதல் நகர்ப் புறங்களில் உள்ள டீக்கடை வரை பேசு பொருளாக மாறி உள்ளது. குறிப்பாக கடந்த ஏப்ரல் மே மாதங்களில் நடைபெற்ற சட்டமன்ற தொகுதி தேர்தலில் தாராபுரத்தில் பதிவான வாக்குகளில் அ.தி.மு.க. 81,100 வாக்குகளும், தி.மு.க. 64,373 வாக்குகளும், த.வெ.க. 46,438 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி 6,026 வாக்குகளும் பெற்றது. இதில், அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட சத்தியபாமா 16,727 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். ஆனால், இம்முறை அதே வேட்பாளர் த.வெ.க. சார்பில் போட்டியிட்டுள்ளார். மேலும் தி.மு.க., அ.தி.மு.க, இடதுசாரிகள், நாம் தமிழர் கட்சி என 5 முனை போட்டியாக கூட்டணி கணக்குகளும் மாறி உள்ளது. இந்த சூழலில் வாக்கு சதவீதம் குறைந்ததால் தாங்களாகவே ஒவ்வொரு கட்சியினரும் ஒரு கணக்கு சதவிகிதத்தை போட்டு யார் வெற்றி பெறுவார் என்று அலசி ஆராய்ந்து வருகின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா கபடா ராஜி (கே. ராஜி)

அக்டோபர் 9 (2008)



திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சிறந்த தொண்டராக விளங்கியதால், 'கருப்புச்சட்டை வீரர்' என்று கழகத்தினரால் அன்பாக அழைக்கப்பட்டவர். தி.மு.க. துவக்கப்பட்டபோது, இராயபுரம் பகுதி 6வது வட்ட அவைத்தலைவராகவும், மாவட்டக் கழக பிரதிநிதியாகவும் இருந்தவர்.

1963ஆம் ஆண்டு மீனவர்கள் கடலில் திசைமாறி காணாமல் போனபோது, ராணா என்ற நேவி கப்பலில் சென்று தேடி கண்டுபிடிக்க உதவியாக இருந்தவர்.

பழவேற்காடு முதல் மாமல்லபுரம் வரை மீனவர்களுக்கு கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி, மீனவர் பெடரேசன் தலைவராகப் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். அவசரநிலையின் போது மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.

'ராஜி' என்று அன்பொழுக தலைவர் கலைஞர் அவர்களால் அழைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தத்துவமேதை டி.கே.சீனிவாசன்

37வது ஆண்டு நினைவு வணக்கம்



தோற்றம் 14.11.1922

மறைவு 9.10.1989

என்றும் தங்கள் வழி நடக்கும்

டி.கே.எஸ்.இளங்கோவன், Ex. M.P., நளினி
(செய்தி தொடர்பு குழு தலைவர், தி.மு.க.)

டி.கே.எஸ்.மணிவண்ணன் குணபூஷணி

டி.கே.எஸ்.தமிழ்ச்செல்வி எஸ்.தமிழ்மணி

திருமதி கீதாலட்சுமி வில்லாளன்

திருமதி. மாதவி – ஜான் விஜய்,

திருமதி. இ.தரணி – எஸ்.ராகவேந்திரமூர்த்தி,

சீனிவாசன், மேகலா, பரிதி ஈசா,